# கடற்கரை கவியரங்கு எண் – 628

நாள் **06-07-2023**



## மனமே எழுக!

இருவிழி சுமந்த உறக்கம் தன்னில்;
எழுகின்ற கனவுகள் எத்தனையோ!
ஒருவழிப் பாதை வாழ்க்கை எனவாய்,
உறவுகள் தாழும் செய்திடுமே!
கருவிழி தன்னில் எழுந்திடும் கலக்கம்,
யார்தான் அறிந்து கொள்வாரோ!
அருமை எனவாய் வாழ்வில் பலவும்,
அறிந்தபின் தோற்றிடும் மனமேதான்!

புதுமை எனவாய்ப் பொங்கும் மனத்தில்,
பொலிவாய்த் தெரிவது எதுவதுவோ!
பதுமை போலே மனத்தை நிறுத்திட,
பக்குவம் தானாய் விளைந்திடுமே!
அதுவும் இதுவுமாய் ஆயிரம் கலன்கள்;
அளித்த வாழ்வில் எதுநிலையோ!
மதுவின் போதையோ மயக்கம் தந்திடும்,
மறுவிலா மனமே அருள்நிதியாம்!

நினைவில் சுமந்து நிம்மதி தொலைத்தால்,
நிறைவாய் வாழ்வும் கடந்திடுமோ?
பினையும் வாழ்வில் பிரியம்தேடி நில்லாமல்,
போயிடும் உயிர்நிலை தெளிவோமே!
மனையும் செல்வமும் மட்டற்று இருந்தால்,
மகிழ்வுடன் உறவுகள் தலைசாய்க்கும்!
அணையும் அன்பில் ஆனந்தம் தேடிட,
அடுத்து காண்போம் இறைநிலையே!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்,**

06-08-2023 (காலை 8-20)